Annexure

**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165171

1. District : Tiruppur
மாவட்டம்
PS: V&AC
காவல்நிலையம்
Year: 2024 FIR No.: 9/2024/AC/TPR
ஆண்டு முதஅ. எண்
Date: 14.10.2024
நாள்

2. (i) Act சட்டம்: The PC Act, 1988 as amended by PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : 10.10.2024 நாள் முதல்
Date to : 14.15hrs நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : 14.10.2024 நேரம் முதல்
Time to : 10.00hrs நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.10.2024
Time நேரம் : 12.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 14.10.2024 GD Vol. II
Time நேரம் : 12.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 18 km North West
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o. Surveyor Office, Avinashi Taluk, Tiruppur.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் S. Manikandan
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. Selvam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27/2024
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Gorment company
(g) Address : முகவரி Door No. 130/62, Kaniyampoondi Road, Rakkiyapalayam, Avinashi Taluk, Tiruppur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Kaliyappan, FTR/Re Surveyor, Avinashi Taluk, Tiruppur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed .................. Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14.10.24.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 14·10·2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police No. எண் .........
VSAC, Tiruppur.
14·10·2024.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2024/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 14.10.2024-ம் தேதி பகல் 12.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.S.மணிகண்டன், த/பெ.செல்வம், கதவு எண், 130/62, கணியாம்பூண்டி வீதி, ராக்கியாபாளையம், அவிநாசி தாலூகா, திருப்பூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் S.மணிகண்டன், த/பெ.செல்வம், கதவு எண், 130/62, கணியாம்பூண்டி வீதி, ராக்கியாபாளையம், அவிநாசி தாலூகா, திருப்பூர் செல்: 9003342203 பெறுநர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், அவிநாசி தாலுகா, ராக்கியாபாளையம், கணியாம்பூண்டி வீதியில் வசித்து வருகிறேன். நான் திருப்பூர், பங்களா ஸ்டாப்பில் ஸ்ரீ கார்மெண்ட்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறேன். கணேசமூர்த்தி என்பவருக்கு சொந்தமாக அவிநாசி தாலுகா, இராமநாதபுரம் கிராமம், க.ச.எண்.302/4-ல் இருந்த 39 செண்ட் நிலத்தில் இருந்து திரு.செந்தில்குமார் த/பெ.ஈஸ்வரமூர்த்தி, மேற்காலதோட்டம், நைனாம்பாளையம், கருவலூர், திருப்பூர் என்பவர் 25 செண்ட் இடத்தை 2022-ம் வருடம் வாங்கியிருந்தார். மேற்படி நிலமானது செந்தில்குமார் பெயரில் சப்டிவிசன் செய்யாமல் இருந்தது. மேற்படி நிலத்தை செந்தில்குமார் அவரச தேவைக்காக விற்பனை செய்கிறார் என்பவ விபரத்தை புரோக்கர் இளங்கோ என்பவர் மூலம் தெரிந்து கொண்டு அதை வாங்க நான் முடிவு செய்தேன். மேற்படி நிலம் சப்டிவிசன் செய்யாமல் இருந்ததால் நான் செந்தில்குமாருக்கு விற்பனை செய்த கணேசமூர்த்தி விண்ணப்பித்தால் சரியாக இருக்கும் என்று நினைத்து இளங்கோவிடம் சொல்லி கணேசமூர்த்தியிடம் நிலத்தை சப்டிவிசன் செய்வதற்கு மனு கொடுக்க சொல்ல சொன்னேன். கணேசமூர்த்தியும் அவிநாசி தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பம் செய்தார். சப்டிவிசன் செய்ய காலதாமதம் ஆனதால் அதற்காக காத்திருக்காமல் நான் செந்தில்குமாரிடமிருந்து மேற்படி நிலத்தினை ரூ.9,81,000/-க்கு 21.09.2024

தேதி கிரையம் பெற்றுக் கொண்டேன். இது அவிநாசி பத்திர அலுவலகத்தில ஆவண எண்12183/2024 என பதிவாகியுள்ளது. மேற்படி நிலத்தின் பட்டாவில் எனது பெயரை சேர்க்க பத்திர அலுவலகத்தில் இருந்து அன்றையதினமே அவிநாசி தாலுகா அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதாக குறுஞ்செய்தி எனது செல்போனுக்கு வந்தது. இந்நிலையில் 10.10.2024 தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் இளங்கோ என்பவர் எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு அவிநாசி பிர்கா சர்வேயர் திரு.காளியப்பன் என்பவர் நிலத்தை பார்வையிட வந்துள்ளதாக சொல்லி அவரிடம் பேசுமாறு சொல்லி சர்வேயர் செல்போன் எண்ணை கொடுத்து என்னிடம் பேச சொன்னார். நான் சுமார் 12.10 மணியளவில் எனது செல்போனிலிருந்து பிர்கா சர்வேயர் திரு.காளியப்பன் அவர்களின் செல்போன் எண்.9344796360 பேசிய போது அவர் உங்களது இடத்தை பார்வையிட்டு அளந்து விட்டதாகவும், உங்களது மேப்பில் கரெக்சன் உள்ளது சைட் மேலே 10 அடி ஏறி உள்ளதால் மேப்பில் திருத்தம் செய்ய வேண்டும். அதனால் தலைமை சர்வேயரிடம் விண்ணப்பம் கொடுங்கள். மேப்பில் கரெக்சன் செய்தால் தான் உங்களது பெயரில் சப்டிவிசன் செய்ய பரிந்துரை செய்ய முடியும் என்று சொன்னார். அதன்பின்னர் சுமார் 2.15 மணியளவில் சர்வேயர் அவர்கள் எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு நிலத்தை அளந்ததற்கு அமவுண்ட் கொடுங்கள் என்று கேட்டார். நான் அவரிடம் எவ்வளவு என்று கேட்ட போது அளந்ததற்கு மினிமம் ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். சுமார் 3.45 மணியளவில் சர்வேயர் அவர்கள் எனது செல்போனுக்கு மீண்டும் தொடர்பு கொண்டு பீல்டை அளந்ததற்கு இதுவரை பணம் கொடுக்கவில்லை. ஜிபே மூலம் பணம் அனுப்ப சொன்னார். அதற்கு நான் என்னிடம் ஜிபே ஆப்சன் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் வேறு யார் மூலம் ஆவது ஜிபே மூலம் பணம் அனுப்புங்கள். இந்த காலத்தில் ஜிபே ஆப்சன் இல்லை என்று சொன்ன முதல் ஆள் நீங்கள் தான் என்று சொன்னார். அமவுண்ட் எப்ப கொடுப்பீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் ஜிபே ஆப்சன் இல்லை 10 நிமிடம் கழித்து யோசித்து சொல்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி என்று சொன்னார். சுமார் 4 மணியளவில் சர்வேயர் அவர்கள் எனது செல்போனுக்கு இரண்டு முறை தொடர்பு கொண்டுள்ளார். நான் செல்போன் அழைப்பை ஏற்கவில்லை. மாலை சுமார் 5 மணியளவில் நான் சர்வேயர் அவர்களது செல்போனுக்கு தொடர்பு கொண்டு பேசிய போது நீங்கள் என்னை அழைத்துள்ளீர்கள் போனை சார்ஜ் போட்டு விட்டு சாப்பிட சென்றதால் போனை

எடுக்கவில்லை என்று சொன்னேன். நான் காலையிலிருந்து வேலை பார்த்துவிட்டு முடித்த பின்னர் நீங்கள் என்னை வந்து இதுவரை பார்க்கவில்லை. மேப்பில் கரெக்சன் இருந்தால் அதை ஸ்கேனரில் போட்டு சரி செய்ய எவ்வளவு வேலை உள்ளது என்று உங்களுக்கு தெரியுமா சர்வேயரை கேவலப்படுத்த கூடாது. நான் கேட்ட அமவுண்டை கொடுத்துவிடுங்கள் என்று கண்டிப்பாக சொன்னார். நான் இன்றைக்கு ரெடி செய்ய முடியவில்லை திங்கட்கிழமை ஆகும் என்று கூறினேன். அதற்கு அவர் திங்கட்கிழமை பணத்தை ரெடி செய்துவிட்டு போன் செய்துவிட்டு வருமாறு சொன்னார். இன்று 14.10.2024 தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நான் சர்வேயர் திரு.காளியப்பன் என்பவரது செல்போன் எண்ணான 9344796360 தொடர்பு கொண்டு பேசிய போது பணத்துடன் நேரில் வாருங்கள் என்று சொன்னார். நானும் மதியத்திற்கு மேல் வருவதாக சொன்னேன். எனது இடத்தை அளந்ததற்கு பணம் ரூ.10,000/- லஞ்சமாக அவிநாசி தாலுகா பிர்கா சர்வேயர் திரு.காளியப்பன் அவர்களுக்கு கொடுக்க விருப்பமில்லை. எனவே லஞ்சம் கேட்கும் பிர்கா சர்வேயர் திரு.காளியப்பன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx S.Manikandan 14/10/2024. Sir, Received the complaint on 14.10.2024 at 12.00 hrs and made preliminary verification between 12.00 hrs to 12.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.9/2024/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 14.10.2024 between 12.30 hrs to 13.30 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 14/10/2024 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of S.Manikandan, S/o.Selvam, D.No.130/62, Kaniyampoondi Street, Rakkiyapalayam, Avinashi Taluk, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 14.10.2024.